புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# தமிழச்சி தங்கபாண்டியனின் எஞ்சோட்டுப் பெண் – வறுமைப் புனைவு

**ந. அஜித் குமார்,**
*முனைவர் பட்ட ஆய்வாளர்,*
*இக்கால இலக்கியத்துறை,*
*தமிழியற்புலம்,*
*மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,*
*மதுரை – 21.*

**முனைவர். வை.இராமராஜபாண்டியன்,**
*நெறியாளர், பேராசிரியர் & புலத்தலைவர்,*
*தமிழியற்புலம்,*
*மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,*
*மதுரை – 21.*

**ஆய்வுச் சுருக்கம்**

*வறுமை என்பது மனிதர்கள் வாழ்வாதாரத்திற்கான வசதிகளற்று இருக்கும் நிலையினைக் குறிக்கும். பொருளாதார ஏற்றத் தாழ்வும், சுரண்டலும் இதற்குக் காரணமாகலாம். ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தினர் பொருள் வதிகளற்று வாழ நிர்பந்திக்கப்பட்ட சமூகமாக நிலவுவதைக் காணமுடிகிறது. பண்டைக் காலத்திலிருந்து வறுமை என்பது உழைக்கும் மக்களையும், கலை சார்ந்தவர்களையும், புலவர்களையும் வாட்டி வதைத்து வருகிற ஒன்றாகக் காணப்படுகிறது. தமிழ் இலக்கியத்தில் வறுமை பற்றிய புனைவுகள் பண்டைக் காலத்திலிருந்தே காணப்படுகின்றன. தமிழ்க் கவிதையுலகில் இயங்கி வருகின்ற தமிழச்சி தங்கபாண்டியன் தன் கவிதைகளில் தான் பிறந்து வளர்ந்த கிராமத்துச் சூழலை சித்திரிக்கின்றார். பால்ய காலத்து நினைவுகளை மீட்டெக்கும் அவரது வெளிப்பாட்டில் வறுமை நிலையில் உள்ளோர் பற்றிய புதிவுகளும் காணப்படுகின்றன. அவை அழகியல் உணர்வுடன் சித்திரம் பெற்றுள்ளன என்பதை இக்கட்டுரை வழி அறிந்து கொள்ளலாம்.*

**குறிப்புச் சொற்கள்**: *வறுமை, அழகியல், புலவர்கள், பாணர்கள், கூத்தர்கள், முடியனூர்க் கிழவி, கொத்தனார் பாக்கியம், பட்டை அறுந்த செருப்பு.*

**ஆய்வு அணுகுமுறை**

*இக்கட்டுரையில் விளக்கமுறை, பகுப்பாய்வு மற்றும் சமூகவியல் ஆய்வு அணுகுமுறைகள் இக்கட்டுரையில் பின்பற்றப்பட்டுள்ளன.*

**முன்னுரை**

*தமிழத்தின் கிராமங்களில் வாழும் மக்கள் பற்றிய புனைவுகளில் எப்பொழுதும் செழிப்பான தன்மையே சித்திரிக்கப்படுகிறது. அத்தகைய புனைவுகளுக்கு மாற்றான ஒரு புனைவாக்கமே வறுமைப் புனைவு ஆகும். மனிதர்கள் பல்வேறு தளங்களில் தம் இருப்பை சாத்தியப்படுத்தும் பல்வேறு பணிகளைச் செய்து வருகின்றார்கள். அப்பணிகளில் தம் வாழ்வாதாரத்தை நிறைவு செய்து கொள்ள முடியாத நிலையில் பலர் வாழ்கின்றனர். உடை, உணவு, இருப்பிடம் ஆகியவற்றின் போதாமையால் வறுமையில் வாழும் எண்ணற்றோர் கிராமங்களில் சிறு சிறு வேலைகள் செய்து அன்றைக்கான உணவினைப் பெறக் கூடியவர்களாக இருக்கிறார்கள். அத்தகையோர் பற்றிய சித்திரிப்புகள் கவிதைகளில் பெரிதும் வந்திருக்கின்றன. கிராமச் சூழல் பசுமை போர்த்திய வயல்களும், வெள்ளந்தி மனிதர்களும் மட்டுமன்று. பண்ணையடிமைகளாய் உழன்று கொண்டிருப்பவர்களும் உரிய கூலி கேட்டுப் பெற இயலாத ஊமைகளாய் வாழ்வோரும் இருக்கும் பகுதியாகும். தமிழச்சி தங்கபாண்டியனின் கவிதைகள் கிராமத்து வாழ்வை மிகவும் போற்றுவது போல் தோன்றினாலும் அவரையும் அறியாமல் கிராமத்தில் வாழும் வாழ வழியற்றோரின் சித்திரிப்புகள் வெளிப்படவே செய்கின்றன.*

*வறுமையில் வாழும் கிழவிகள், பெண்கள், முதிய ஆண்கள் எனப் பலவரைப் பற்றியும் கூறுகிறார்.*

**வறுமைப் புனைவு**

*பழங்காலத்திலிருந்தே பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் மிகுதியாக இருக்கும் வகையில் சமூகம் கட்டமைந்திருப்பதால் இருப்போர் இல்லாதோர் என்ற பாகுபாடு காணப்படுவது இயல்பாக இருந்தது. "நிலவுடைமைச் சமுதாயத்தில் தனியுடைமையும் வேலைப் பிரிவினைகளும் உடையோர் இல்லோர் எனும் ஏற்றத் தாழ்வுகளும் நிலவியுள்ளன" (பெ.மாதையன், தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்கள் காலமும் கருத்தும், ப.174) என்ற கருத்தில் இருப்போர் இல்லாதோர் என்னும் பிரிவினை வறுமைக்குக் காரணமாக அமைந்தது என்பதை அறிந்து கொள்ள முடிகிறது. பண்டைக் காலத்தில் கூட பாணர்கள், கூத்தர்கள், விறலியர், பொருநர் போன்ற கலை சார்ந்து வாழ்ந்தவர்களும், புலவர்களும் கூட வறுமை நிலையில் இருந்ததை அறிய முடிகிறது. நல்லோரையே வறுமை பற்றும் என்று கூறும் வழக்கமும் சமூகத்தில் காணப்படுகிறது. "நல்லவன் வறுமைப்பட அந்நல்லவனை உணர்ந்தோரும் விடமாட்டார். அவர்கள் அவன் வறுமைப்படுகிறான் என்பதை அறிய முடியாதவாறு உளவளத்தால் வாழப் பழகி விட்டவன்" (இளங்குமரனார், முத்திரைக் குறள்கள், ப.57) என்ற கூற்றினால் அறிந்து கொள்ளலாம். வறுமையில் செம்மை என்று இதனைக் கூறுவர் பாரதியார் வறுமையிலும் பிறர் நலத்தைப் பேணினார் என்பதை அவரது வாழ்வு எடுத்துக் காட்டும் அவர் வறுமையில் வாழ்ந்தார் என்பதை "இவ்வாறு எழுத்தையே தொழிலாகக் கொண்டிருந்த பாரதி வறுமையிலேயே வாழ்ந்து மறைந்தவன்" (ஆ.இரா.வேங்கடாசலபதி, அந்தக் காலத்தில் காப்பி இல்லை, ப.55) என்ற கூற்றினால் அறிந்து கொள்ளலாம் வறுமை புலமையும் எப்போதும் இணைந்தே இருப்பவை என்றும் கூறுவார்கள். ஆனால் இருப்போர் இல்லாதோர் என்னும் ஏற்றத் தாழ்வினை உருவாக்கும் உடைமைச் சமூக நிலையே வறுமைக்கு முதன்மையான காரணம் எனக் கொள்ளலாம். வறுமை நீக்கத்தை அரசியலார் தம் வாக்கு வங்கி அரசியலுக்கே பயன்படுத்துகின்றனர் என்பதை "வறுமையைப் பற்றிப் பேசுவதும், எழுதுவதுமே வசதியுள்ளவனாவதற்கு ஒரே வழியோ என்று பலர் குதர்க்கமாகப் புரிந்து கொள்ளும் அளவுக்கு வறுமையை அரசியல்வாதிகள் இன்னும் ஒரு மேடைப் பிரசங்கப் பொருளாகவே வைத்திருக்கிறார்கள். தொடர்ந்து வைத்துக் கொண்டுமிருக்கிறார்கள்" (நா.பார்த்தசாரதி, சிந்தனை வளம், ப.12) என்ற கூற்றினால் அறியலாம்.*

*இவ்வாறு வறுமை குறித்து பழந்தமிழ் சிந்தனைகளும் தற்காலத்துச் சிந்தனைகளும் காணப்படுகின்றன. இலக்கியங்களில் பதிவுகள் வறுமையைப் பற்றி மிகுதியாகக் காணப்படுகின்றன. இரக்கம், கொடை, விருந்தோம்பல் என்பன வறுமையை நீக்க நிலவுடைமைச் சமூகம் கண்ட வழிமுறைகள் எனலாம். அதனால்தான் கலைத் தொழில் சார்ந்தவர்கள் மன்னர்களையும் புரவலர்களையும் கண்டு தம் திறமையை வெளிப்படுத்தி வறுமை போக்கிக் கொண்டனர் "பொருநர்களின் வாழ்வில் வறுமை பல நாட்கள் நீடித்திருக்கும் பொருநர்கள் கொட்டைப் பாசியின் வேர் போன்று அழுக்கான ஆடைகளையும் வயிறு ஒட்டிய உடலையும் பெற்றிருப்பதால் அவர்களுடைய நீண்ட வறுமை பாண் சமூகத்தில் தாழ்ந்த தகுதிநிலையைக் காட்டுகிறது" (பக்தவத்சலபாரதி, பாணர் இனவரைவியல், ப.57) என்ற கூற்றில் இதனை அறிந்து கொள்ளலாம்.*

**அடித்தள மக்கள் வறுமை**

*மக்கள் சமூகம் பல்வேறு அடுக்குகளைக் கொண்டதாக கட்டமைக்கப்பட்டு உள்ளதை அறியலாம் அதில் மேலடுக்கில் இருப்போர் உயர்குடியினர். செல்வந்தர்களாகவும், கீழ்த்தட்டில் இருப்பவர்கள் வறுமை தோய்ந்த ஏழைகளாகவும் இருக்கிறார்கள் இந்த மக்கள் பற்றிய பதிவுகள் காலந்தோறும் இருந்து வருகின்றன. தமிழ்க் கவிதைகளில் சங்க காலத்திய பதிவுகளிலும் வறுமை என்பது பொது மக்களை வாட்டும் ஒன்றாக இருந்து வந்துள்ளது. பசிப்பிணி அகற்றுதலை நோக்கமாகக் கொண்ட மணிமேகலைக் காப்பியத்தில் அடித்தள மக்கள் என்போர் வறுமைப் பிடியில் இருந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. "ஒரு புறம் வள்ளன்மையும் மறுபுறம் வறுமையுமாய் இருவேறு தளத்துள் இவ் உலகு இயங்கிக் கொண்டிருக்கிறது. நவீன வளர்ச்சி உலகிலும் கூட உண்ண உணவின்றி தவிக்கும் கொடுஞ் சூழலைக் கண்கூடாக் கண்டு*

*வருகிறோம்" (சொ.சுரேஷ், பா.பிரபு, மார்க்சிய நோக்கில் பழந்தமிழகம், ப.65) என்ற கூற்றின் மூலம் பழந்தமிழகம் முதல் இன்றைய தமிழகம் வரை வறுமையின் பிடியிற் சிக்கியோர் இருக்கின்றனர் என்பதை அறிந்து கொள்ளலாம்.*

### ***தமிழச்சியின் கவிதைகளில் வறுமை நிலை***

*தமிழ்க் கவிஞர்களில் இன்று இயங்கி வரக் கூடிய தமிழச்சி தங்க பாண்டியன் எளிய கிராமத்திலிருந்து நகரம் நோக்கிச் சென்றவர் என்று குறிப்பிடப்படுகிறார். ஏழ்மை நிலையிலிருந்து பகட்டான வாழ்விற்கு சென்ற தன்னைப் பற்றி அவரே "இந்தியாவின் தென் தமிழ்நாட்டைச் சேர்ந்த கிராமத்து வேளாண் குடியில் பிறந்தேன். கல்வித்துறை, வேலையின் பொருட்டும் வளம்பெறும் பொருட்டும் பெருநகரத் தலைநகர் சென்னைக்கு குடிபெயர நேர்ந்தது" (தமிழச்சி தங்கபாண்டியன், நிழல்வெளி, ப.15) என்று குறிப்பிடுகிறார். எனவே அவருடைய மனமானது கிராமத்து மக்களை அசை போட்டபடியே இருக்கிறது என்பதை உணர்த்துகிறார்.*

### ***எஞ்சோட்டுப் பெண் கவிதைகளில் வறுமை***

*தமிழச்சி தங்கபாண்டியனின் எஞ்சோட்டுப் பெண் கவிதைகள் பெரும்பான்மையும் அவர் வாழ்ந்த கிராமத்துச் சூழலை வெளிப்படுத்துவனவாக அமைந்துள்ளன.*

*"வண்டிப்பாரம் தாங்காமல் தேய்ந்ததின்*
*எச்சத்தையோ*
*ஒட்டுக்கள் பல போட்டு*
*ஒட்டிய வாழ்வின்*
*அறுந்த மிச்சத்தையோ*
*அல்லது*
*பயனற்றுப் போன சோகத்தின்*
*உச்சத்தையோ சொல்லலாம்*
*இந்தப்*
*பாதிப் பட்டை பிய்ந்து கிடக்கின்ற*
*ஒற்றைச் செருப்பு*
*விட்டுச் சென்ற*
*கால்களைப் பற்றிய*
*ஒரு கவிதையை ஒளித்தபடி" (எஞ்சோட்டுப் பெண்.93)*

*என்னும் கவிதை வரிகள் கொண்டிருக்கும் தேய்ந்ததின் எச்சம், ஒட்டுப் போட்ட, அறுந்த மிச்சம், பயனற்றுப் போன சோகம், பாதிப் பட்டை பிய்ந்த செருப்பு போன்றவை மனிதர்கள் சந்திக்கும் ஏழ்மையை பறைசாற்றும் சொற்களாக கருதத் தக்கனவாக வெளிப்படுகின்றன. ஒட்டுப் போட்டு துணிகளைத் தைத்து உடுத்திக் கொள்பவர்கள் பற்றிய சிந்தனையைத்தான் கவிஞரின் ஒட்டுப் போட்டு வாழும் வாழ்க்கை என்று குறிப்பிடுகிறார். தேய்ந்ததின் மிச்சம் என்ற சொற்றொடர் மூலம் வாழ்வின் பாரம் தாங்காது தேய்ந்து போன இற்றுப் போன வாழ்வை வாழும் மனிதர்களை குறிப்பிடுகிறார் எனக் கொள்ள முடிகிறது. பிய்ந்து போன ஒற்றைச் செருப்பு என்பதன் உருவகம் வயதாகி கிழப்பருவம் எய்தியவரின் உருவம் வெளிப்படுமாறு சித்திரிப்பதைக் காணமுடிகிறது. வறுமை நிலையை பூடகமாக வெளிப்படுத்தும் கவிதையென இதனைக் கொள்ள முடிகிறது.*

*முடியனூர்க் கிழவியின் சித்திரமானது அதன் பெருமையைப் பேசுவது போல் தோன்றினாலும் அவளது வறுமை நிலையை உணர்த்தும் வகையில் காணப்படுகிறது.*

*"செருப்பில்லாமல்*
*சுடு வெயிலில்*
*நடந்தே தடிப்பேறிய*
*கால்களில்*
*தலைமுடியில் திரித்த*
*கருவளையத்தைக்*
*காத்துக் கருப்பு*
*அண்டாதிருக்க அணிந்திருப்பாள்.*

தோல் சுருங்கித் தேய்ந்தாலும்
உலக்கை பிடிக்கையிலும்
உரலில் இடிக்கையிலும்
ஒரு குத்திற்கு மறு குத்து
ஓங்கிப் பதில் கொடுக்கும்'' (எஞ்சோட்டுப் பெண். பக்.96-97)

என்ற கவிதை வரிகள் முடியனூர்க் கிழவி பற்றி சித்திரிக்கிறது. அழகியல் உணர்வுடன் அக்கிழவியின் வறுமை பேசப்படுகிறது. செருப்பில்லாத கால், சுருங்கித் தேய்ந்தத் தோல் என்பன அக்கிழவியின் வறுமையினால் பாதிக்கப்பட்டிருக்கும் நிலையை உணர்த்துவன. எத்தனை வயதாகித் தளர்ந்தாலும் தன் பிழைப்பிற்காக உலக்கையால் தானியங்களைக் குத்தவும், .உரலில் இடிக்கவும் செய்ய வேண்டும் என்று கூறுவதானது. வயோதிகத்தின் வறுமை நிலையை உணர்த்துகிறது. தங்கம் அணியும் விருப்பம் உடையவள் ஆனால் அதற்கு வழியில்லாதவள். சிறு பெண் வாங்கித் தந்த பித்தளை மோதிரத்தையேனும் அணிந்திருக்கிறாள் என்று கவிஞர் குறிப்பிடுகிறார்,

''ஒரு குந்துமணித்
தங்கம் போட்டுக்
கட்டையிலே போக
வேண்டுமெனக்
கடைசி ஆசை வைத்திருந்த
எனக்காய் மெதுவடை
முடிந்து வரும்
முடியனூர்க் கிழவி
சாகும் பொழுது போட்டிருந்தாளாம்
சுற்றுலா போன நினைவாய்
விளையாட்டாய் நான்
வாங்கிக் கொடுத்திருந்த
பிள்ளையார் படம் போட்ட
பித்தளை மோதிரத்தை'' (எஞ்சோட்டுப் பெண்.99)

என்னும் கவிதை வரிகள் இதனை உணர்த்துகின்றன. முடியனூர்க் கிழவி தன் வாழ்நாளெல்லாம் உழைத்து வாழ்ந்தாலும் சிறு தங்கம் கூட எடுக்க முடியாதவள். ஆயினும் அந்த வறுமையிலும் செம்மை உடையவள் சிறு பெண்ணுக்கு வடை வாங்கித் தருவாள் என்று கூறப்படுகிறது,

கணினி வாங்க வேண்டும் என்ற விருப்பமும் அதன் ஊடாக வெளிப்படும் பொருளாதார சிக்கலும் பற்றி ஒரு கவிதையில் பேசுகிறார். கணினி வாங்கி விட்டார்கள் ஆனால் அதனை வைப்பதற்கு ஓர் அறை தனியாக ஒதுக்க வேண்டுமே என்ற நினைவு அப்போது ஏற்படுகிறது,

''வரவேற்பறையும்
வசதிப்படாது என்பதால்
வராந்தாவைத் தடுத்து
வாகான இடமாக்கி
வடக்கு மூலையில் உள்ள
சன்னலோரம்
வருகின்ற கணினியை
வைத்து விட முடிவாயிற்று'' (எஞ்சோட்டுப் பெண், ப.101)

என்ற கவிதை வரிகள் வாழ்வில் இன்றியமையாத பொருளாகிப் போனதால் கணினி இல்லாமல் வாழ்வு நகராது. நகரமாயினும் கிராமமாயினும் அதன் தேவை ஒவ்வொரு குடும்பத்திற்கும் இருக்கிறது என்பதால் கடினமானப் பொருளாதார நெருக்கடியிலும் அதனை வாங்கி விடுகின்ற குடும்பத்தினர். அதனை வைப்பதற்கான அறையை ஒதுக்குவதில் சிக்கல் நேரிடுகிறது. இருக்கின்ற இரண்டு அறைகளில் அதற்கென முழுமையாக ஒதுக்குவது இயலாது என்பதால் வராந்தாவில் ஒதுக்குவதாகக் கூறப்படுகிறது. முந்தைய காலத்தில் வராந்தா என்பது பொழுது போக்கிற்காக தாயம் விளையாடுவதும் சிறு குழந்தைகள் சொட்டாங்கல் விளையாடுவதுமான இடமாகும். அந்த இடத்தை கணினிக்கு ஒதுக்க வேண்டிய தேவை ஏற்படுகிறது.

*கிராமங்களில் பெண்கள் பல்வேறு பணிகளைச் செய்து குடும்பத்தின் பொருளாதாரத் தேவைகளை நிறைவு செய்வார்கள். கவிஞர் கூறுகிற கொத்தனார் பாக்கியம் என்ற சொல் வலிமையுடையதாக இருந்தாலும் அந்தப் பெண் வறுமைக்கு தன்னை ஒப்புக் கொடுத்தவள் என்பதை அவளைப் பற்றிய சித்திரிப்பில் அறிந்து கொள்ள ஏதுவாகிறது.*

*"அத்தக் கூலிக்கோ*
*ஒப்பந்த அடிப்படையிலோ*
*ஆட்களை நடவுக்கும்*
*களையெடுக்கவும்*
*அனுப்பி வைக்கும்*
*கொத்தனார் பாக்கியம்*
*ரவிக்கையில்லா*
*இரு தோளிலும்*
*அடர்த்தியாய்ப்*
*பச்சை குத்தியிருப்பாள்" (எஞ்சோட்டுப் பெண்.105)*

*என்ற கவிதை வரிகள் கொத்தனார் பாக்கியத்தின் உருவ அமைப்பைப் பற்றியதாக அமைகிறது. ரவிக்கையில்லாத தோள்கள் என்பது பழமையான காலத்துக் கிராமத்துக் கிழவியைச் சுட்டுவதாகக் கொள்ளலாம். ஆட்களை சேர்த்து அவர்களுக்குப் பணி தருபவள் என்ற பொருள் தொனித்தாலும் அவளுக்கு வருமானம் என்பது பற்றிக் கூறவில்லை. மூச்சுப் பிடிப்புக்கு வைத்தியம் பார்ப்பாள். அதற்கு கூலியாக,*

*"காப்பித் தண்ணியும்*
*வெத்திலைச் செல்லம்*
*இரண்டு இலையும் போதும்" (எஞ்சோட்டுப் பெண், ப.106)*

*என்று குறிப்பிடப்படுகிறது. அவளுடைய தகுதிக்கு அது போதும் என்று கூறுவதாகவே இது அமைகிறது. அவளுடைய வருமானமோ மிக சொற்பம் அதனைக் கொண்டே வாழ்வை நடத்தும் நிலை என்பதால் அதன் நினைவுகள் மிக அதிகம் என்று கூறுவதாக,*

*"நின்றாள்*
*நிமிர்ந்தாள் கூலியெனப்*
*பிசிறாமல் போடும் மனக் கணக்கு*
*மாசக் கடைசி வரை*
*பிசகாமல் நினைவிருக்கும்" (எஞ்சோட்டுப் பெண், ப.107)*

*என்ற கவிதை வரிகளால் அறிந்து கொள்ள முடிகிறது. கூலியின் நினைவை உடையவள் என்பதால் வேறு வழியில்லாதவள் அதனைக் கொண்டுதான் காலத்தைக் கடத்தியாக வேண்டும் என்ற நிலையில் நினைவு வைத்திருப்பது இன்றியமையாததாகிறது. தஞ்சைப் பகுதியில் தாண்டவமாடும் வறுமை நிலையைப் பற்றி சுருக்கமான கவிதையொன்றைக் கூறுகிறார் கவிஞர்,*

*"தன்மானம் அடகு வைத்துத்*
*தட்டு ஏந்தியபடி*
*தஞ்சாவூர் விவசாயி*
*சொல்ல முடியாது பிள்ளைகளிடம்*
*சோழ நாடு சோறுடைத்து" (எஞ்சோட்டுப் பெண், ப.115)*

*என்ற கவிதை வரிகள் வறுமை நிலையில் வேறு வழியின்றி தன்மானத்தையும் விட்டு விட்டு தட்டு ஏந்தும் நிலைக்கு ஆளான விவசாயிகளின் பழம் பெருமை எந்த விதத்திலும் சோறிடாது என்பதை உணர்ததுவதாக அமைகிறது.*

***முடிவுரை***

*வறுமை என்பது ஏற்றத் தாழ்வினை உணர்த்தும் ஒன்றாக காலந்தோறும் சமூகத்தில் இருந்து வருகிறது. இருப்போர் இல்லாதோர் என்னும் பிரிவினை ஏற்படுத்திய வறுமை நிலைக்கு பொருளாதார சமத்துவமின்மையே காரணமாகும். சொத்துக்களை தன்வயப்படுத்தும் முதலாளிய, நிலபிரபுத்துவ சமூகத்தில் வறுமை நிலையில் மக்கள் இருப்பது இயல்பான ஒன்றாகக் கருதப்படுகிறது. கிராமத்துச் சூழலை தன் கவிதையில் மீள் நினைவுகளாக வெளிப்படுத்தும் கவிஞரின் மனத்தில் வெவ்வேறு சூழல்களில் உள்ளவர்களைப் பற்றிய நினைவுகளை மீட்டும்*

*போது அவர்கள் சித்திரிப்பானது அழகியல் உணர்வுடன் முன் வைக்கப்படுகின்றன. அவற்றில் ஒளிந்திருக்கும் வறுமை நிலையினை அறிந்து கொள்ள ஏதுவாக சித்திரிப்பு அமைந்துள்ளது. கிழவிகள், ஒட்டுப் போட்ட வாழ்வினை உடையவர்கள், தேய்ந்து அறுந்த செருப்பினை உடையவர்கள், வறுமையிலும் செம்மை உடையவர்கள், துணிமணி இல்லாதவர்கள், நாகரிக வாழ்விலும் வறுமை நிலைக்கு ஆளானவர்கள், சோறுடைத்த சோழ நாட்டில் தட்டேந்தும் விவசாயிகள் என அழகியல் உணர்வுடன் வறுமையினைக் கவிதைகளில் புனைந்துள்ளார் என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.*

**துணைநூற்பட்டியல்**


1. *ஆ.இரா.வேங்கடாசலபதி, அந்தக் காலத்தில் காப்பி இல்லை, காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், 2000.*
2. *இரா.இளங்குமரனார், முத்திரைக் குறள்கள், திருவள்ளுவர் தவச்சாலை, திருச்சி, 2013.*
3. *சொ.சுரேஷ், பா.பிரபு, மார்க்சிய நோக்கில் பழந்தமிழகம், வனிதா பதிப்பகம், தி.நகர், சென்னை, 2019.*
4. *தமிழச்சி தங்கபாண்டியன், எஞ்சோட்டுப் பெண், காவ்யா, கோடம்பாக்கம், சென்னை, 2017.*
5. *தமிழச்சி தங்கபாண்டியன், நிழல் வெளி, உயிர்மை பதிப்பகம், அபிராம புரம், சென்னை, 2017.*
6. *நா.பார்த்தசாரதி, சிந்தனை வளம், தமிழ்ப்புத்தகாலயம், திருவண்ணாமலை, சென்னை, 1982.*
7. *பக்தவத்சலபாரதி, பாணர் இனவரைவியல், அடையாளம் பதிப்பகம், கருப்பூர் சாலை, திருச்சி, 2015.*
8. *பெ.மாதையன், தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்கள் காலமும் கருத்தும், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், அம்பத்தூர், சென்னை, 2011*


********* ********* ********** ********* ********* ********** ********** **********